**தலைப்பு 298 – அளவுக்கூறுகள், கட்டளைகள் மற்றும் சேவைகள் திணைக்களம்**

---

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

அளவீட்டு அலகுகள், நியமங்கள் மற்றும் சேவைகள் திணைக்களத்தின் 2019 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று, காசுப்பாய்ச்சல் கூற்றுடன் கூடிய 2019 திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்துடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலைமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 11(1) பிரிவின் பிரகாரம் அளவீட்டு அலகுகள், நியமங்கள் மற்றும் சேவைகள் திணைக்களத்திற்கு வழங்கப்படும் இந்நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக எனது கருத்துரைகளும் அவதானிப்புகளும் அடங்கிய தொகுப்பு அறிக்கையில் 2020 யூன் 19 ஆந் திகதியில் கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு வழங்கப்பட்டது. தேசிய கணக்காய்வு சட்டத்தின் 11(2) பிரிவின் பிரகாரம் திணைக்களத்தின் விரிவான முகாமைத்துவ கணக்காய்வு அறிக்கை 2020 யூன் 26 ஆந் திகதி கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு வழங்கப்பட்டது. இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(6) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தின் 10 ஆம் பிரிவின் பிரகாரம் இந்த அறிக்கை சமர்ப்பிக்கப்படுகின்றது.

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டிருந்த விடயங்களிலிருந்தான தாக்கத்தை தவிர்த்து 2019 திசெம்பர் 03 ஆந் திகதிய 271/2019 ஆம் இலக்க அரச கணக்குகள் சுற்றறிக்கை ஏற்பாடுகளின் பிரகாரம் தயாரிக்கப்பட்டு அந் நிதிக்கூற்றுக்கள் 2019 திசெம்பர் 31 இல் உள்ளவாறான அளவீட்டு அலகுகள், நியமங்கள் மற்றும் சேவைகள் திணைக்களத்தின் நிதி நிலைமை மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று, காசுப்பாய்ச்சல் கூற்று என்பன பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு கோட்பாடுகளுக்கு இணங்க உண்மையான மற்றும் நியாயமான நிலைமையை பிரதிபலிக்கின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.2 முனைப்பழியுள்ள கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக எனது பொறுப்பு, கணக்காய்வாளரின் பொறுப்பு என்ற பிரிவில் மேலும் விபரிக்கப்பட்டுள்ளது. எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

### 1.3 நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரினதும், கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் பொறுப்பு

பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு கோட்பாடுகளுக்கு அமைவாகவும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 38 பிரிவில் குறிப்பிடப்பட்ட ஏற்பாடுகளுக்கு இணங்க உண்மையான மற்றும் நியாயமான நிலைமையை பிரதிபலிக்கும் வகையில் நிதிக்கூற்றுக்களைத் தயாரித்தல் மோசடிகள் மற்றும் தவறுகள் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்று இன்றி நிதிக்கூற்றுக்களை தயாரிக்க கூடிய

வகையில் உள்ளகக் கட்டுப்பாட்டினை தீர்மானித்தல் பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தர் மற்றும் கணக்கீட்டு உத்தியோகத்தரின் பொறுப்பாகும்.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தின் 16(1) பிரிவின் பிரகாரம் திணைக்களத்தினால் வருடாந்த மற்றும் உரிய நேரத்தில் நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு முடியுமான வகையில் தனது வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பாக உரிய வகையில் புத்தகங்கள் மற்றும் அறிக்கைகளை பேணிச் செல்லல் வேண்டும்.

தேசிய கணக்காய்வு சட்டத்தின் 38(1)(இ) பிரிவின் பிரகாரம் திணைக்களத்தின் நிதிக் கட்டுப்பாட்டிற்காக ஆக்கபூர்வமான உள்ளகக் கட்டுப்பாட்டு முறைமையொன்றை தயாரித்து பேணிச் செல்லுவதனை கணக்கீட்டு உத்தியோகத்தர் உறுதிப்படுத்துதல் வேண்டியதுடன் அம்முறையின் செயற்திறன் தொடர்பாக காலத்திற்கு காலம் மீளாய்வொன்று செய்யப்பட்டு அதன் பிரகாரம் முறைமை செயற்திறனாக மேற்கொள்வதற்கு தேவையான மாற்றங்கள் செய்யப்படல் வேண்டும்.

## 1.4 நிதிக்கூற்றுக்கள் கணக்காய்வு தொடர்பாக கணக்காய்வாளரின் பொறுப்பு

ஒட்டு மொத்தமாக நிதிக்கூற்றுக்கள், மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்டதாக நியாயமான உறுதிப்படுத்தலொன்றைப் பெற்றுக்கொள்வது மற்றும் எனது அபிப்பிராயம் உள்ளடக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை வழங்குவது எனது நோக்கமாகும். நியாயமான உறுதிப்படுத்தல் உயர் மட்டத்திலான உறுதிப்படுத்தலொன்றாக இருந்த போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எப்போதும் பொருண்மையான தவறான கூற்றுக்களின் இல்லாமை என்பதன் உறுதிப்படுத்தலொன்றல்ல. மோசடிகள் அல்லது தவறுகள் தனியாகவோ கூட்டாகவோ தாக்கமளிப்பதால் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இருக்க கூடியதாக இருப்பதுடன் இந்நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துவோரால் பொருளதார தீர்மானங்கள் எடுக்கும் போது அது தொடர்பாக கருத்திற் கொள்ளப்படல் வேண்டும்.

துறைசார் வெளிப்படை மற்றும் தொழில்துறை பின்னணியுடன் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வு செய்யப்பட்டன. என்னால்

- மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் இனங்காணும் போதும் மதிப்பீட்டின் போது சந்தர்ப்பத்திற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடுவதன் மூலம் மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய ஆபத்துகளை தவிர்த்துக் கொள்வதற்கும் போதுமான மற்றும் பொருத்தமான கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்ளல் எனது அபிப்பிரயாத்திற்கு அடிப்படையாகும். பொருண்மையான பிறழ் கூற்றினால் எழும் தாக்கங்களினை விட மோசடிகளால் இடம்பெறும் தாக்கம் பாரியதாக இருப்பதுடன் தவறான கூட்டிணைவு, தவறான ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே விட்டுவிடுதல் அல்லது உள்ளக கட்டுப்பாட்டை தவிர்ப்புச் செய்தல் மோசடியொன்று ஏற்படுவதற்கு காரணமாகின்றது.

- சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடும் பொருட்டு திணைக்களத்தின் உள்ளக கட்டுப்பாட்டின் ஆக்கபூர்வமான தன்மை தொடர்பாக அபிப்பிராயமொன்றை தெரிவிப்பதற்கு கருத்து தெரிவிக்கவில்லை.

- வெளிப்படுத்தல்கள் உள்ளடக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கத்திற்காக அடிப்படையான கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் சம்பவங்கள் பொருத்தமான மற்றும் நியாயமான வகையில் நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளதாக மதிப்பீடு செய்தல்.

- ஒட்டுமொத்தமாக நிதிக்கூற்றுக்கள் தயாரிக்கம் போதும் நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கத்திற்கான கொடுக்கல் வாங்கல்கள் சம்பவங்கள் பொருத்தமாகவும் நியாயமாகவும் உள்ளடக்கப்பட்டுள்ளதாக

எனது கணக்காய்வில் இனங்காணப்பட்ட முக்கியமான கணக்காய்வு கண்டுபிடிப்புக்கள் பிரதான உள்ளகக் கட்டுப்பாட்டு பலவீனங்கள் மற்றும் ஏனைய விடயங்கள் தொடர்பாக கணக்கீட்டு உத்தியோகத்தர் தெரியப்படுத்தப்பட்டுள்ளனர்.

## 1.5 ஏனைய சட்டத்தேவைப்பாடுகள் தொடர்பான அறிக்கை

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 6(1)(ஈ) உப பிரிவு மற்றும் 38 ஆம் பிரிவின் பிரகாரம் பின்வரும் விடயங்கள் தெரிவித்துக் கொள்கின்றேன்.

(அ) முன்னைய ஆண்டின் நிதிக்கூற்றுக்களுடன் இணங்குவதாகவும்

(ஆ) இந்த அறிக்கையின் 1.6.1 மற்றும் 1.6.5 ஆம் பந்திகளில் குறிப்பிடப்பட்டுள்ள அவதானிப்புக்களின் பிரகாரம் முன்னைய ஆண்டில் சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக எனது அறிக்கையில் சுட்டிக்காட்டப்பட்ட பரிந்துரைகள் செயற்படுத்தப்பட்டிருக்கவில்லை.

## 1.6 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

### 1.6.1 நிதிக்கூற்றுக்கள் சுற்றறிக்கை ஏற்பாடுகளுக்கு இணங்காமை

| | அவதானிப்புக்கள் | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (அ) | 2019 திசெம்பர் 03 ஆந் திகதிய 271/2019 ஆம் இலக்க அரசாங்க கணக்குகள் சுற்றறிக்கை 7 ஆம் பந்தியின் (vi) ஆம் பிரிவின் பிரகாரம் நிதிச் செயலாற்றல் அறிக்கையின் பிரகாரம் ஆண்டின் இறுதியில் திறைசேரிக்கு தீர்வு செய்ய வேண்டிய அல்லது திறைடீசேரியிடமிருந்து கிடைக்க வேண்டிய பெறுமதி மற்றும் காசேட்டின் பிரகாரம் திறைசேரிக்கு தீர்வு செய்ய வேண்டிய பெறுமதி கட்டாயமாக வேறு பெறுமதியொன்றை எடுப்பதால் அம்மீதியை உறுதிப்படுத்து வதற்காக கட்டுநிதி சீராக்க கணக்கொன்று தயாரிக்கப்பட்டிருக்கவில்லை. அவ்வாறு கட்டுநிதி மீதியை பரீட்சிப்பதற்காக கட்டுநிதி சீராக்க கணக்கொன்று சமர்ப்பிக்காமையால் கணக்குகளின் சரியான தன்மையை பரீட்சிக்க முடியவில்லை. | சுற்றறிக்கை அறிவுறத்தல்களின் படி நடவடிக்கை எடுத்தல் வேண்டும். | 2020 நிதிக்கூற்றுக்களுடன் சமர்ப்பிக்கின்றேன். |

### 1.6.2 நிதிச் செயலாற்றல் அறிக்கை

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

| | அவதானிப்புக்கள் | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (அ) | நிதிச்செயலாற்றல் கூற்றில் ஏனைய பெறுவனவுகளாக இனங்காணப்பட வேண்டிய பெறுமதி திணைக்களத்தின் விரிவான பரீட்சை மீதியின் பிரகாரம் ரூபா 6,797,291 ஆக இருந்த போதும் நிதிச் செயலாற்றல் கூற்றில் அது ரூபா 5,326,224 ஆக காண்பிக்கப்பட்டமையால் ரூபா 1,471,067 ஆன வேறுபா டொன்று அவதானிக்கப்பட்டது. | விரிவான பரீட்சை மீதியில் காணப்படும் பெறுமதி நிதிக்கூற்றுக்களில் ஏனைய வருமானமாக இனங்காணப்பட வேண்டும். | வருமான கணக்கீட்டு உத்தியோகத்தர் திணைக்களததின் அல்லாமையால் வருமானமொன்றாக கணக்கீடு செய்யப்படவில்லை யென |
| (ஆ) | நிதிக்கூற்றுக்களின் முற்பணக் கணக்கு தொடர்பாக ஏசீஏ – 5 படிவத்தில் காட்டப்பட்ட 298012 ஆம் இலக்க முற்பணக் கணக்கிற்குரிய ஆண்டில் வரவுப் பதிவு மூலம் செலவு வைத்தலின் கீழ் ரூபா 1,276,350 காண்பிக்கப்பட்டிருந்ததுடன் திணைக்களத்தின் திரட்டிய பரீட்சை மீதியின் பிரகாரம் அப்பெறுமதி ரூபா 771,219 ஆக இருந்தமையால் ரூபா 505,130 ஆன வேறுபாடொன்று காணப்பட்டது. | வரவுக் குறிப்புக்களிலிருந்து தாக்கம் தொடர்பாக சுற்றறிக்கை அறிவுறுத்தல்களின் பிரகாரம் நடவடிக்கை மேற்கொள்ளப்படும். | 2019 ஆம் ஆண்டின் போது திணைக் களத்திலிருந்து வேறு திணைக்களங்களுக்கு இடமாற்றம் பெற்றுச் சென்ற உத்தியோ கத்தர்களின் கடன் மீதியை தீர்வு செய்வதற்காக ஒவ்வொரு திணைக்களத்தினால் மாதாந்த கணக்குகள் பொழிப்பு மூலம் 298012 ஆம் இலக்க முற்பணக் கணக்கிற்கு செலவு வைத்தலாகும். |

### 1.6.3 நிதி நிலைமை தொடர்பான கூற்று

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| 02 சொத்து விடயங்களுக்குரிய 2019 சனவரி 01 இல் உள்ளவாறு வழங்கப்பட்டுள்ள மீதிகள், 2018 திசெம்பர் 31 இல் சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றிலான மீதிகளுடன் ஒப்பிடும் போது ரூபா 281,760,544 | நிதிக்கூற்றுக்களில் சரியான பெறுமதி வெளிப்படுத்தப்பட வேண்டும். | எதிர்காலத்தில் சரியாக கணக்கீடு செய்கின்றேன். |

ஆல் இணங்காமல் இருந்ததுடன் அது தொடர்பில் நிதிக்கூற்றுக்களில் வெளிப்படுத்த வேண்டிய போதிலும் அவ்வாறு செய்யப்பட்டிருக்கவில்லை

**1.6.4 காசுப்பாய்ச்சல் கூற்று**

---------------------------------------

| **கணக்காய்வு அவதானிப்பு** | **பரிந்துரை** | **கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை** |
| --- | --- | --- |
| திணைக்களத்தின் திரட்டிய பரீட்சை மீதியின் பிரகாரம் முற்பண அறவீடுகளின் பெறுமதி ரூபா 6,079,011 ஆக இருந்த போதும் காசுப் பாய்ச்சல் கூற்றில் அப்பெறுமதி உள்ளடக்கப் பட்டிருக்கவில்லை. | சுற்றறிக்கை அறிவுறுத்தல்களின் படி நடவடிக்கை எடுத்தல் வேண்டும். | முற்பண அறவீடுகள் குறுக்கு பதிவு கொடுக்கல் வாங்கலொன்றாக இருப்பதால் காசுப் பாய்ச்சல் கூற்றில் காண்பிக்கப்பட வில்லை. |

**1.6.5 கணக்கீட்டு உத்தியோகத்தரால் மேற்கொள்ளப்பட வேண்டிய உறுதிப்படுத்தல்கள்**

---------------------------------------

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

| **கணக்காய்வு அவதானிப்பு** | **பரிந்துரை** | **கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை** |
| --- | --- | --- |
| 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 38 ஆம் பிரிவின் பிரகாரம் திணைக்களத்தின் நிதிக் கட்டுப்பாட்டிற்காக செயற்திறனான உள்ளக கட்டுப்பாட்டு முறைமை தயாரித்து பேணிச் செய்யப்படுவதாக கணக்கீட்டு உத்தியோகத்தரால் உறுதிப்படுத்த வேண்டியதுடன் அம்முறைமையின் செயற்திறன் தொடர்பாக காலத்திற்கு காலம் மீளாய்வு செய்வது அதன் பிரகாரம் முறைமையை செயற்திறனாக மேற்கொள்வதற்கு தேவையான மாற்றங்கள் இடம் பெற வேண்டிய போதிலும் அம் மீளாய்வு எழுத்து மூலம் செய்யப்பட்டு அதன் பிரதியொன்று கணக்காய்வாளர் | 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தின் 38 ஆம் பிரிவின் பிரகாரம் நடவடிக்கை மேற்கொள்ளப்பட வேண்டும். | உரிய கூற்றுக்கள் எதிர்வரும் காலத்தில் சமர்ப்பிக்கப்படும். |

தலைமை அதிபதிக்கு சமர்ப்பிக்க வேண்டியிருந்த போதிலும் அவ்வாறான மீளாய்வொன்று மேற்கொள்ளப்பட்டதற்கான கூற்று கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

### 1.6.6 சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடனான இணங்காமைகள்

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
| --- | --- | --- |
| 2016 மார்ச் 31 ஆந் திகதிய 05/2016 ஆம் இலக்க அரச நிதிச் சுற்றறிக்கையின் பிரகாரம் மீளாய்வாண்டிற்காக வருடாந்த பொருள் மெய்மையாய்வொன்று மேற்கொண்டு அந்த அறிக்கையை 2020 மார்ச் 17 இற்கு முன்னர் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட வேண்டிய போதிலும் அவ்வாறு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | 2016 மார்ச் 31 ஆந் திகதிய 05/2016 ஆம் இலக்க அரச நிதிச் சுற்றறிக்கையின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். | பொருள் மெய்மையாய்வு செயற்பாடுகள் பூர்த்தி செய்யப்பட்டு காணப்படுவதுடன் பூர்த்தி செய்யப்பட்டவுடன் உடனடியாக சமர்ப்பிக்கப்படும். |

## 2 நிதி மீளாய்வு முகாமைத்துவம்

### 2.1 செலவின முகாமைத்துவம்

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
| --- | --- | --- |
| 298-1-1-2103 ஆம் இலக்க செலவின விடயத்தின் கீழ் இயந்திரங்கள் மற்றும் இயந்திர உபகரணங்களுக்காக ரூபா 10,000,000 ஆன நிதிஏற்பாடு மேற்கொள்ளப்பட்டிருந்த போதிலும் அப்பெறுமதி முழுஜமயாக சேமிக்கப்பட்டிருந்தது. | இயலுமான வரை நடைமுறை ரீதியாக மதிப்பீடு தயாரிக்கப்பட வேண்டும். | 2019 திசெம்பர் 31 ஆந் திகதி வரை கட்டளையிடப்பட்ட உபகரணங்களுக்குரிய ஆவணங்கள் கிடைக்காமையால் திறைசேரியிலிருந்து கட்டுநிதி கோரப்படவில்லை. |

## 3 செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 திட்டமிடல்

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| 2014 பெப்ரவரி 17 ஆந் திகதிய 2014/01 ஆம் இலக்க அரச நிதிச் சுற்றறிக்கையின் பிரகாரம் 2019 ஆண்டிற்காக தயாரிக்கப்பட்ட செயல் நடவடிக்கைத் திட்டத்தில் நாளது வரையாக்கப்பட்ட திணைக்களத்தின் ஒழுங்கமைப்பு கட்டமைப்பு உள்ளடக்கப்பட்டிருக்கவில்லை. | 2014 பெப்ரவரி 17 ஆந் திகதிய 2014/01 ஆம் இலக்க அரச நிதிச் சுற்றறிக்கையின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | பதில் அனுப்பியிருக்க வில்லை. |

### 3.2 எதிர்பார்க்கப்பட்ட வெளியீட்டு மட்டம் அடையப்படாமை

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| (அ) அளவீட்டு அலகுகள் உபகரணங்களை பயன்படுத்தும் உற்பத்தியாளர்கள், வியாபாரிகள், இறக்குமதி யாளர்கள் மற்றும் புதுப்பிப்பவர்கள் என்போரை பதிவு செய்வதற்காக 600 அனுமதிப்பத்திரங்கள் 2019 ஆம் ஆண்டில் வழங்குவதற்கு இலக்கிடப்பட்டிருந்ததுடன் அதில் 548 அனுமதிப் பத்திரங்கள் மாத்திரம் வழங்கப்பட்டிருந்தன. அதிலிருந்து உழைக்கப்பட்ட வருமானம் ரூபா 134,550 ஆக இருந்தது. | இலக்கிடப்பட்ட வருமானத்தை பெற்றுக் கொள்ள நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | பதில் அனுப்பியிருக்க வில்லை. |

| | | | |
|---|---|---|---|
| (ஆ) | மீளாய்வாண்டில் போலி அளவீட்டு அலகுகள் தொடர்பான 22165 சுற்றி வளைப்புக்கள் மேற்கொள்ளப்பட்டிருந்ததுடன் அதில் வெற்றிகரமான சுற்றி வளைப்புக்களின் எண்ணிக்கை 1514 ஆக இருந்தன. இச்சுற்றி வளைப்புக்களிலிருந்து தண்டப் பணமாக ரூபா 2,855,350 ஆன வருமானமொன்று உழைக்கப்பட்டிருந்ததுடன் முல்லைத்தீவு மற்றும் மன்னார் மாவட்டங்களல் எவ்வித சுற்றி வளைப்புக்கள் மேற் கொள்ளப்பட்டிருக்கவில்லை. | இலக்கினை அடைந்து கொள்ள நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | பதில் அனுப்பியிருக்க வில்லை. |
| (இ) | 2019 திசெம்பர் 31 ஆம் திகதியில் காற்றுச்சீராக்கல் முறைமையொன்றை பொருத்துவதற்காக ரூபா 995 ஆன செயற்திட்டமொன்ற செயல்நடவடிக்கைத் திட்டத்தில் உள்ளடக்கப்பட்ட போதும் 2020 மே 25 ஆந் திகதி வரையிலும் ஆய்வுகூடத்தில் காற்றுச் சீராக்கல் முறைமையொன்றை பொருத்தப்பட்டிருக்கவில்லை. | இலக்கினை அடைந்து கொள்ள நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | பதில் அனுப்பியிருக்க வில்லை. |

### 3.3 வருடாந்த செயலாற்றல் அறிக்கை

பின்வரும் விடயம் அவதானிக்கப்பட்டன.

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தின் 16(2) உப பிரிவிற்கமைய நிதிக் கூற்றுக்களுடன் வருடாந்த செயலாற்றல் அறிக்கை கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு சமர்ப்பிக்கப்பட வேண்டும். எனினும் 2019 மே 31 ஆம் திகதி வரையிலும் அவ்வாறு நடவடிக்கை எடுக்கப் பட்டிருக்கவில்லை. | 2018 யூலை 17 ஆந் திகதிய 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 16(2) உப பிரிவிற்கமைய நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | எதிர்காலத்தில் வருடாந்த செயலாற்றல் அறிக்கை சமர்ப்பிப்பதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்படும் |

## 4 நிலைபேறான அபிவிருத்தி நோக்கங்களை அடைந்து கொள்ளல்.

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| நிலைபேறான அபிவிருத்தி நோக்கங்கள் மற்றும் இலக்குக்களை திணைக்களம் அடையாளம் கண்டு கொண்டுள்ள போதிலும் அதற்கான தரவுகளை சேகரிப்பதற்கான திட்டமிடல் ஒன்றோ வேலைத் திட்டமொன்றோ செயற்படுத்தப்பட்டிருக்கவில்லை. | பொருத்தமான தரவுகளை சேகரிப்பதற்கான செயன்முறைகளை விரைவில் மேற்கொள்ளப்பட வேண்டும். | எதிர்காலத்தில் சமர்ப்பிக்கின்றேன். |

## 5 நல்லாளுகை

### 5.1 கணக்காய்வு மற்றும் முகாமைத்துவ குழு

பின்வரும் விடயம் அவதானிக்கப்பட்டன.

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தின் 41 ஆம் பிரிவின் பிரகாரம் கணக்கீட்டு உத்தியோகத்தரால் திணைக்களத்தின் செயலாற்றலை தொடர்ச்சியான அடிப்படையொன்றில் மீளாய்வு செய்வதற்காக கணக்காய்வு மற்றும் முகாமைத்துவ குழுவொன்று நியமிக்கப்பட வேண்டிய போதிலும் திணைக்களத்தினால் அதன் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | 2016 சனவரி 28 ஆம் திகதிய டிஎம்ஏ/2009(i)(i) ஆம் இலக்க கணக்காய்வு முகாமைத்துவ சுற்றறிக்கையின் 2 ஆம் பந்தி மற்றும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தின் 41 ஆம் பிரிவின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | கருத்துரை தெரிவிக்கவில்லை. |

## 6 மனித வள முகாமைத்துவம்.

பின்வரும் விடயம் அவதானிக்கப்பட்டன.

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| (அ) 2018 ஆம் ஆண்டின் போது சிரேஷட மட்ட பதவிகளில் 09 வெற்றிடங்கள் காணப்பட்டதுடன் அப்பதவிகளுக்கு இடையே உள்ளகக் கணக்காய்வாளர் பதவி தவிர 7 உதவிப் பணிப்பாளர் பதவிகள் மற்றும் உதவிப் பணிப்பாளர் (நிர்வாகம்) பதவியொன்று என்பன வெற்றடமாக காணப்பட்டன. அதன் பிரகாரம் அங்கீகரிக்கப்பட்ட 19 பதவிகளில் 08 பதவிகள் வெற்றிடங்களாக காணப்பட்டமையால் திணைக்களத்தின் செயலாற்றல் தொடர்பில் கருத்திற்கொள்ள வேண்டிய தாக்கமொன்று ஏற்படுத்தும் ஆபத்தொன்று அவதானிக்கப்பட்டது. | திணைக்களத்தின் கடமைகளை நிறைவேற்றக்கூடிய வகையில் வெற்றிடங்களை நிரப்புவது தொடர்பில் கவனம் செலுத்தப்பட வேண்டும். | கருத்துரை தெரிவிக்கவில்லை. |
| (ஆ) 2019 ஆம் ஆண்டின் இறுதி வரை சிரேஷ்ட மட்ட பதவிகளில் 08 வெற்றிடங்களும் மூன்றாம் மட்டத்தில் 24 வெற்றிடங்களும் இரண்டாம் மட்டத்தில் 38 வெற்றிடங்களும் ஆரம்ப மட்டத்தில் 12 வெற்றிடங்களும் இருந்தன. அதாவது அங்கீகரிக்கப்பட்ட பதவி எண்ணிக்கையில் 22 சதவீதத்தை நிரப்புவதற்கு நடவடிக்கை எடுக்காமையால் அது திணைக்களத்தின் செயலாற்றல் தொடர்பில் கருத்திற்கொள்ள வேண்டிய தாக்கமொன்று ஏற்படுத்தும் ஆபத்தொன்று அவதானிக்கப்பட்டது. | திணைக்களத்தின் சிரேஸ்ட பதவி வெற்றிடங்களை நிரப்புவதற்கு கவனம் செலுத்தப்பட வேண்டும். | கருத்துரை தெரிவிக்கவில்லை. |